கூடுதல்  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

**அசல் வழக்கு எண்   226/2019**

**இடைக்கால மனு எண்.07/2024**

மனுதாரர் தரப்பு சாட்சி – 1  துரைசாமி  திரு.கார்த்திக், இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 28.01.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>எதிர்மனுதார தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்ய பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கிழமேல் மற்றும் தென்வடல் அளவுகள் வழக்குரையில் குறிப்பிட்டு காண்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வரைபடம் தாக்கல் செய்துள்ளேன். அதில் அளவுகள் உள்ளது. தாவா சொத்திற்கு எந்த திசையில் பிரதிவாதிகளின் சொத்து உள்ளது என்றால் கீழ்புறம்உள்ளது. வழக்கு தாக்கல் செய்த சமயத்திலேயோ, இடைக்கால மனுவியில் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட சமயத்திலேயோ எனது நிலத்தில் வேலி எதுவும் இல்லை என்றால் சரிதான்.

2. தென்னை மட்டைகளை கட்டி மறைப்பு ஏற்படுத்தியிருந்தோம். இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பிறகு தான் எனது இடத்தில் வேலி அமைக்க முயற்சி செய்தோம் என்றால் சரிதான். முதலில் தென்னை மட்டைகளை கட்டியிருந்தோம். அதன் பின்னிட்டு தகர சீட்டுகளை போட்டு வேலி போட முயற்சித்தேன். எந்த தேதியில் பிரச்சனை வந்தது என்றால் 17.01.2024. மேற்படி தேதியில் ஏற்பட்ட பிரச்சனை யார் யாருக்கு தெரியும் என்றால் அந்த ஊரில் பக்கத்தில் இருந்தவர்களுக்கு தெரியும். மேற்படி பிரச்சனை சம்மந்தமாக அதே தேதியில் புகார் அளித்தேனா என்றால் இல்லை. அதற்கு மறுநாள் புகார் கொடுத்தோம்.

**எதிர்மனுதாரர் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai**